தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 10 அக்டோபர் – 2016 ₹1.00



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகப் புதிய கட்டமைப்பு வசதிகளை துவக்கிவைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு **முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் நாட்டிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டின் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், மதுரை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு ரூபாய் 633.96 லட்ச மதிப்பிலான 10 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளை 21.09.2016அன்று காணொலிக் காட்சிமூலம் துவக்கி வைத்தார். மேலும், மாதவரம் பால்பண்ணையில் உள்ள பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் ரூபாய் 22.88 லட்சத்தில் புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழக வெள்ளி விழா நினைவுத் தூணை துவக்கி வைத்து, பல்கலைக்கழகத்தின் நந்தனம் வளாகத்தில் ரூபாய் 120.00 லட்சத்தில் கட்டப்படவுள்ள பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கக் கட்டட வளாகத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

## பல்கலைக்கழக நிறுவன நாள் விழா– 2016 மற்றும் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் தின விழா



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் "இலாபகரமான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பிற்குக் குறைந்த விலையிலான புதிய தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்துதல்" என்ற பொருளில் கண்காட்சி மற்றும் பண்ணையாளர் தொழில்நுட்பப் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பல்கலைக்கழக நிறுவன நாள் விழா–2016 மற்றும் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் தின விழா 18.09.2016 மற்றும் 19.09.2016ஆம் தேதிகளில் ஈரோடு, பரிமளம் மஹாலில் நடத்தப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கண்காட்சி மற்றும் பண்ணையாளர் தொழில்நுட்பப் பயிலரங்கை 18.09.2016அன்று துவக்கிவைத்தார். பல்கலைக்கழக நிறுவன நாள் விழா–2016இன் நிறைவு விழா 19.09.2016அன்று ஈரோடு, பரிமளம் மஹாலில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, ஆட்டம்மைத் தடுப்பூசி, அதிகளவு உற்பத்தி செய்வதற்காகப் பரிமாற்றம் செய்யப்பட்ட தடுப்புமருந்துத் தொழில்நுட்பம் ஆகியவற்றை வெளியிட்டுப் பயனாளிகளுக்கு இடுபொருட்களையும், 14 முன்னோடிப் பண்ணையாளர்களுக்குச் சிறந்த பண்ணையாளர் விருதினையும், கோயம்புத்தூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்குச் சிறந்த பல்கலைக்கழகப் பயிற்சி மையம்–2016 விருதினையும், சாந்திநல்லா ஆடு இனப்பெருக்க ஆராய்ச்சி மையத்திற்குச் சிறந்த பல்கலைக்கழகப் பண்ணை–2016 விருதினையும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சிறந்த பல்கலைக்கழகக் கல்லூரி–2016 விருதினையும் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில் சத்தியமங்கலத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி மையம் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்று குறிப்பிட்டார். மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் பண்ணையாளர் தொழில்நுட்பக் கையேடு வெளியிட்டு, கால்நடைக் கதிர் இதழிலில் சிறந்த கட்டுரைக்கான விருதினை வழங்கி, 30 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழக ஆசிரியர்களைச் சிறப்புசெய்து, ஆசிரியர்கள் மற்றும் புறநிலை முகமைகளின் விருதுபெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுச்

சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் தமிழ்நாடு அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விலையில்லாக் கறவை மாடு வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 145.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், ஈரோட்டில் பல்நோக்குச் சிறப்புக் கால்நடை மருத்துவ சிகிச்சை மையம் நிறுவப்பட உள்ளது என்றும் குறிப்பிட்டார். மேலும், ரூபாய் 12.75கோடியில் பல்லடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய கோழியின நோய் கண்டறிதல்



மற்றும் கண்காணிப்பு ஆய்வகம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தமது சிறப்புரையில் நாமக்கல்லில் தரக் கட்டுப்பாடு ஆய்வகம் அமைப்பதற்கு ரூபாய் 35.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். மேலும், நாட்டிலேயே முதன்முறையாகப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளான கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலும் சிடி ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்படும் என்றார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு. த. ஆபிரகாம் இ.ஆ.ப. அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விலையில்லாக் கறவை மாடு/ ஆடு வழங்கும் திட்டத்தின் நன்மைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். மாண்புமிகு கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ஈரோடு மாவட்ட ஆட்சியர் டாக்டர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையுரை ஆற்றினார். சென்னை, நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு. எஸ்.என்.ஏ. ஜின்னா அவர்கள் உரையாற்றினார். முன்னதாக, பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் வரவேற்புரை



ஆற்றினார். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணக்குமார் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் விழா நிகழ்வுகள், பண்ணைத் தொழிலில் உற்பத்தி பெருக்கத் தொழில்நுட்பச் செயல்விளக்கங்கள், பண்ணைத் தொழிலுக்கான குறைந்த செலவிலான தொழில்நுட்பங்கள், கால்நடை உற்பத்திப் பொருட்களை மதிப்பூட்டுதல், கால்நடை மற்றும் கோழியினங்கள் கண்காட்சி, பண்ணையாளர்கள் ஆராய்ச்சியாளர்கள் தொழில்நுட்பக் கலந்துரையாடல் ஆகிய மையப் பொருள்களில் கண்காட்சியில் 50க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெற்றன. சிறு வெளியீடுகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. கண்காட்சி அரங்குகள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றிருந்த வல்லுநர்கள் பண்ணையாளர்களின் பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்தனர். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்கத்தின்மூலம் உருவாக்கப்பட்ட கறவை மாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, பசுந்தீவன உற்பத்தி குறித்த டிஜிட்டல் விளக்கப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும், வீடியோ பாடங்கள் திரையிடப்பட்டன. அறிவியலாளர்கள் மற்றும் பண்ணையாளர்களிடையே அறிவு பரிமாற்றத்திற்காகக் கலந்துரையாடல் அமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர்களுக்கென்றே தனிக் கலந்துரையாடல் அமர்வும் நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 7,000க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். 3000 பண்ணையாளர்கள், 500 பள்ளி மாணவர்கள் ஆகியோர் அறிவுப் பகிர்வு அமர்வில் பங்கேற்கப் பதிவுசெய்து கொண்டனர்.

## கால்நடைகளுக்கான பேரிடர் மேலாண்மை உத்திகள் குறித்த சிறப்புப் பயிற்சி




பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள பேராசிரியர்களுக்குக் “கால்நடைகளுக்கான பேரிடர் மேலாண்மை உத்திகள்” குறித்த சிறப்புப் பயிற்சி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பேரிடர் அவசரக் குழுவின் மூலம் 26.09.2016 முதல் 28.09.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பயிற்சி மையங்களைச் சார்ந்த 28 பேராசிரியர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். துணைவேந்தர் அவர்கள் தமது துவக்கவுரையில் டிசம்பர் 2015இல் ஏற்பட்ட மழை வெள்ளத்தின்போது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்தார். மேலும், பேரிடர் மேலாண்மையை ஆராய்ச்சிக்குரிய பொருண்மையாகச் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக் குழுவின் செயல்பாடுகளை விவரித்தார். தாய்லாந்து, பாங்காக்கில் உள்ள உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் கால்நடை மேலாளர் டாக்டர் நாரிட்சோன் போல்பெர்ம் அவர்கள் “உலகளவில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கால்நடைகளுக்கான அவசர உதவிகள்” குறித்துக் கருத்துரை வழங்கினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, கால்நடைப் பேரிடர் அவசரக் உதவிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம். பாலகங்காதர திலகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார் மற்றும் புதுதில்லி, உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் திட்ட மேலாளர் திரு. ஆன்சன் தம்பி பிரேம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். 28.09.2016 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பாங்காக், உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பின்

கால்நடை மேலாளர் டாக்டர் நாரிட்சோன் போல்பெர்ம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ரா. ஜெயப்பிரகாஷ் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி உரை நிகழ்த்தினார்.

## ஆய்வக விலங்கின அறிவியலில் சான்றிதழ்ப் படிப்பு

பல்கலைக்கழகக் கால்நடை நலக்கல்வி மையத்தின் கீழ் இயங்கும் ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவுமூலம் “ஆய்வக விலங்கின அறிவியலில் சான்றிதழ்ப் படிப்பு” சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 14.09.2016 முதல் 24.09.2016 வரை நடைபெற்றது. பயிற்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 14.09.2016அன்று துவக்கிவைத்தார். கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் முனைவர் பி.ஜ. கணேசன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மருந்து மற்றும் உயிர்த்தொழில்நுட்பநிறுவனங்கள், பிற அரசுசார்ந்த நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 30 விஞ்ஞானிகள் பயிற்சிபெற்றனர். 24.09.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில், துணை ஒருங்கிணைப்புச் செயலாளர் முனைவர் எம்.ஆர். சீனிவாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஜ. கணேசன் அவர்கள் சான்றிதழ் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். ஒருங்கிணைப்புச் செயலாளர் முனைவர் எஸ். ரமேஷ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆய்வு



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மையத்தின் கீழ் செயல்படும் பல்வேறு பண்ணை ஆராய்ச்சி நிலையங்களின் செயல்பாடுகளை 23.09.2016 மற்றும் 24.09.2016ஆம் தேதிகளில் பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு செய்தார்.

## மூலிகைத் தோட்டம், மாதிரிப் பசுந்தீவனப் பாத்தி மற்றும் மர நாற்றாங்கால் தோட்டம் திறப்பு விழா

மரபுசார் கால்நடை மருத்துவத்திற்காகவும் அரிய வகை மூலிகைத் தாவரங்களைப் பராமரித்துப் பாதுகாப்பதற்காகவும் 100க்கு மேற்பட்ட மூலிகைத் தாவரங்களைக் கொண்ட மூலிகைத் தோட்டம்; விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்க்குச் செயல்விளக்கம் செய்துகாட்டும் வகையில் பயன்படும் 8 வகையான பயறு வகைத் தீவனப்புல், 19 வகையான பசுந்தீவனப்



புல் வகைகள் கொண்ட மாதிரிப் பசுந்தீவனப் பாத்தி; பண்ணை வளாகங்களில் வளர்ப்பதற்கும் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்குமென 18 பல்வேறு மர வகைப் பசுந்தீவனங்களைக் கொண்ட மர நாற்றங்கால் தோட்டம் ஆகியவை பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. இப்புதிய வசதிகளைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 23.09.2016அன்று திறந்துவைத்தார். இந்நிகழ்வில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணக்குமார் அவர்கள் பங்கேற்றார். பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ.க. திருவேங்கடன், உதவிப் பேராசிரியர்கள் இரா. ராஜ்குமார், லோ. அருண், ப. செந்தில்குமார், வெ.சங்கர் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

## பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் “நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி” 14.09.2016 முதல் 21.09.2016 வரை நடைபெற்றது. பயிற்சியில் 6 பண்ணை மகளிர் உட்பட மொத்தம் 30 பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நாமக்கல், கால்நடை மருத்துவக்



கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின நோய் ஆய்வகம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள், முன்னோடி விவசாயிகள் ஆகியோர் விரிவுரை வழங்கினர். மேலும் குஞ்சுப் பொரிப்பக மேலாண்மை, கலப்புத் தீவனம் தயாரித்தல், அசோலா வளர்ப்பு, குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பு மருந்து அளித்தல் ஆகியவை குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் 30.09.2016 அன்று இலக்கியம்பட்டி கிராமத்தில் “மாடுகளைத் தாக்கும் ஒட்டுண்ணி நோய்கள்” குறித்த வெளிவளாகப் பயிற்சி நடத்தப்பட்டு, 23 விவசாயிகளுக்கு ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களிலிருந்து மாடுகளைக் காக்கும் வழிமுறைகள் குறித்துப் பயிற்சியளிக்கப்பட்டது.

## ஆத்மா பட்டறிவுப் பயணம்



கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தோகைமலை வட்டார ஆத்மா திட்ட நிதியுதவியுடன் 50 விவசாயிகள் பயனடையும் வகையில் பொட்டனேரியில் அமைந்துள்ள ஆடு ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஈரோட்டில் உள்ள கறவை மாட்டுப்பண்ணை ஆகிய இடங்களுக்கு 02.09.2016 மற்றும் 03.09.2016ஆம் தேதிகளில் பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அறிவியல் முறையிலான ஆடு வளர்ப்பில் உள்ள தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குக் கற்பிக்கப்பட்டன. மேலும், பசுந்தீவன உற்பத்தி, உடல் எடை கணக்கிடுதல், தீவன நறுக்கி, மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் பற்றி செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

## இடுபொருட்கள் வழங்கல்



சென்னை, நபார்டு வங்கியின் நிதியுதவியிலான “நாமக்கல் கோழி–1 வகையைக் கிருஷ்ணகிரி கிராமப்புற மக்களிடம் பிரபலப்படுத்திக் கூடுதல் வருவாயை ஏற்படுத்துதல்” என்ற திட்டத்தின்கீழ் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் சொல்லேபுரம் கிராமத்தில் 01.09.2016அன்று இடுபொருட்கள் வழங்கல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியைக் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் பி. சம்சுதீன் அவர்கள் துவக்கிவைத்தார். கிருஷ்ணகிரி, நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திருமதி நஸ்ரீன் சலீம் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த 55 பயனாளிகளுக்கு மொத்தம் 660 நாமக்கல் கோழி–1 வகைக் குஞ்சுகள், அவற்றிற்கான தீவனம் மற்றும் பஞ்சாரம் ஆகியவற்றை வழங்கினார்.

## உயர்வகை மேச்சேரி செம்மறி ஆட்டினக் கிடாக்கள் வழங்கல்

“உயர்வகை மேச்சேரி செம்மறியாடு” இனப்பெருக்கத் திட்டத்தின் பயனாளிகளுக்கான கூட்டம் 06.09.2016 அன்று கரூர் மாவட்டம் தென்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணக்குமார் அவர்கள் பங்கேற்று, கலந்துரையாடிப் பயனாளிகளுக்கு ஒன்பது உயர்வகை மேச்சேரி செம்மறி ஆட்டினக் கிடாக்களை வழங்கினார். பேராசிரியர் மற்றும் தலைவர், திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர்



அ.க. திருவேங்கடன், உதவிப் பேராசிரியர் மற்றும் இணை ஆராய்ச்சியாளர் இரா. ராஜ்குமார் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

## கோழி நோய்த்தடுப்பு முகாம்

ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியும் ஒசூர், கால்நடை பராமரிப்புத் துறையும் இணைந்து நபார்டு வங்கியின் நிதியுதவிமூலம் கோழிகளுக்கான இலவச நோய்த்தடுப்பு முகாமை கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டம், பேலகொண்டபள்ளி கிராமத்தில் 07.09.2016அன்று நடத்தின. முகாமில் மொத்தம் 480 நாட்டுக்கோழி மற்றும் மேம்படுத்தப்பட்ட கோழி இனங்களுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு எதிரான தடுப்பூசி அளிக்கப்பட்டது. மேலும், “கோழிகளில் நோய்த்தடுப்பு மேலாண்மை” என்ற பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதன் மூலம் 40 விவசாயிகள் பயனடைந்தனர்.

## கால்நடை மற்றும் கோழிகள் நல முகாம்



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் கால்நடை மற்றும் கோழிகள் நல முகாம் 23.09.2016அன்று திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், தென்பத்து கிராமத்தில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து உரையாற்றினார். மொத்தம் 159 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## மரக்கன்று நடும் விழா

கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, காஞ்சிபுரம் மாவட்டம், சாஸ்திரம்பாக்கம் கிராமத்தின் கோயில் மற்றும் தெருக்களில் பூ மரங்கள், பழ மரங்கள், தீவன மரங்கள், நிழல் தரும் மரங்கள் மற்றும் உத்திர மரங்கள் என இவற்றின் 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் காட்டுப்பாக்கம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம்மூலம் 09.09.2016அன்று நடப்பட்டன. சொந்த விவசாய நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு அகத்தி மற்றும் சுபாபுல் போன்ற தீவன மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

## புதிய பல்கலைக்கழக அதிகாரிகள் நியமனம்

**முனைவர் பெரு. மதியழகன்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் புதிய பதிவாளராக 07.09.2016 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கல்வி, ஆராய்ச்சி, ஊரக வளர்ச்சி மற்றும் மக்கள் திரள் தகவல் பரவல் ஆகியவற்றில் 33 ஆண்டுகள் அனுபவம் வாய்க்கப் பெற்றவர். மக்கள் பங்கேற்புவழி ஊரக மேம்பாடு குறித்த முதுநிலைப் பட்டயப் படிப்பை அறிமுகப்படுத்தியதோடு பேரிடர் காலக் கால்நடை அவசர மீட்புப் பிரிவு, தனுவாஸ் வெப் டி.வி., பண்ணை இதழான கால்நடைக் கதிர், இளந்தென்றல் மாணவர் இதழ் ஆகியவற்றை ஏற்படுத்திய பெருமைக்குரியவர். மேலும், தனுவாஸ் எய்ம் பிளாக், மாட்டுப் பண்ணையாளர் தொழில்நுட்பப் பரவல் பேழை, குறைந்த செலவில் தீவன உருவாக்கத்திற்கான மென்பொருள், குறைந்த செலவிலான குஞ்சுப் பொரிப்பான், ஆடு வளர்ப்பு வழிகாட்டும் வல்லுநர் கருவி, பாமாச்சா, ஆராய்ச்சிப் பிரச்சனைகளை இனங்காணும் முறையியல், கறவைமாடு வளர்ப்போர் ஆற்றலூட்டும் பங்கேற்பு மாதிரி, மூன்று–கால்நடைப் பேரிடர் மேலாண்மை மாதிரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊரக மகளிர் மேம்பாட்டுத் திறன்களை அளந்தறிவதற்கான இரு உளவியல் கருவிகள் ஆகியவற்றை உருவாக்கிய சிறப்பிற்குரியவர். இவர், 5 வானொலி வேளாண் பள்ளி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துள்ளார். 108 வானொலி உரைகளை நிகழ்த்தியுள்ளார். மேலும், 68 ஒலிப் பாடங்கள் மற்றும் 17 குறும்படங்களைத் தயாரித்து அளித்துள்ளார். 150க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆய்வுச் சுருக்கங்களையும், 105 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். இவர், 17 புறநிலை நிதியுதவியிலான ஆய்வுத் திட்டங்களின் முதன்மை ஆராய்ச்சியாளராகவும்,இணை ஆராய்ச்சியாளராகவும் இருந்து திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். 80 அறிவியல் ஆய்வரங்குகளின் இணை அமைப்பாளர், அமைப்பாளர் மற்றும் வல்லுநர் எனப் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார்.



**முனைவர் தி.ஜெ. அரிகிருஷ்ணன்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் புதிய ஆராய்ச்சி இயக்குநராக 07.09.2016அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பல்கலைக்கழகப் பதிவாளராக 22.06.2013முதல் 21.06.2016வரை பணியாற்றியுள்ளார். பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக 1990இல் பணி தொடங்கிய இவர், பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். ஐந்து முதுநிலைப் பட்டம் மற்றும் மூன்று முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். 10 புறநிலை நிதியுதவி முகமைத் திட்டங்களையும், 2 பகுதி–II திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவராக இவர் பணியாற்றியபோது ஈக்களைக் கட்டுப்படுத்தும் ஆய்வகத்தை ஏற்படுத்தினார். 3 அறிவியல் நூல்களையும், 14 பன்னாட்டு ஆய்விதழ்கள் உட்பட பல ஆய்விதழ்களில் இடம்பெற்ற 97 முழு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 12 பொதுக் கட்டுரைகளையும் வெளியிட்டிருப்பதோடு, பல்வேறு கருத்தரங்குகள், உச்சி மாநாடுகள், மாநாடுகள் மற்றும் பயிலரங்குகளில் 24 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார்.



**முனைவர் கு. மணி** அவர்கள் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் முதல்வராக 07.09.2016அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 1989இல் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்து பல்வேறு நிலைகளில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றியுள்ளார். இவர் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர் கல்வி மையம் மற்றும் தலைவாசல் கோழியின நோய் ஆய்வகம் ஆகியவற்றை நிறுவியதில் பெரும்பங்காற்றியவர். 6 புறநிலை நிதியுதவித் திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளராகவும், 5 புறநிலை நிதியுதவித் திட்டத்தின் இணை ஆராய்ச்சியாளராகவும் செயல்பட்டுள்ளார். 52 ஆராய்ச்சி மற்றும் 60 அறிவியல் கட்டுரைகள், 18 புத்தகம் மற்றும் சிறு நூல்கள், 27 பயிற்சி மற்றும் கற்பித்தல் கையேடுகளை வெளியிட்டுள்ளார். 6 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும், ஒரு முனைவர் பட்ட மாணவருக்கும் ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இளநிலை ஆராய்ச்சியாளர் விருது, எஸ்கேஎம் விருது மற்றும் இளம் விஞ்ஞானி விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.



## பட்ட மேற்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு

பல்கலைக்கழகம் அளிக்கும் முனைவர் பட்டப் படிப்பிற்கான (கால்நடை அறிவியல்/உணவுத் தொழில்நுட்பம்) கலந்தாய்வு 09.09.2016அன்றும், எம்.வி.எஸ்சி., எம்.டெக். (உணவுத் தொழில்நுட்பம்), எம்.எஸ்சி. மற்றும் முதுநிலைப் பட்டயப் படிப்புகளுக்கான கலந்தாய்வு 10.09.2016அன்றும் நடைபெற்றன. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பல்கலைக்கழகப் பதிவாளர், பல்கலைக்கழகத் தேர்வாணையர் மற்றும் மாணவர் சேர்க்கைக் குழுத் தலைவர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், ஒரத்தநாடு, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்கள், சேர்க்கைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## இந்தியக் கால்நடை மருத்துவக் குழுமத்தின் ஏற்பளிப்பு

ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தொடங்கப்பட்ட 2012இல் இருந்து தொடர்ந்து 5ஆவது ஆண்டாக அக்கல்லூரிகளில் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கு இந்தியக் கால்நடை மருத்துவக் குழுமத்தின் ஏற்பளிப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 31.10.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051

**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பல்கலைக்கழக முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| செல்பேசிவழிச் சேவை இணைப்புக் கூட்டம் | : 02.09.2016 |
| பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் | : 02.09.2016 |
| தேசிய வேளாண் அபிவிருத்தி ஆய்வுக்கூட்டம் | : 21.09.2016 |
| தேர்வுக் குழுக் கூட்டம் | : 15.09.2016 & 26.09.2016 |

## பணி ஒய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர் விடுதியின் உடனாள்(முதுநிலை) திரு. என். வீரராகவலு அவர்கள் 30.09.2016அன்று பணி ஒய்வு பெற்றார். 11.09.1956இல் பிறந்த இவர், மொத்தம் 21 ஆண்டும் 11 மாதங்களும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் திரு. ஆர். குமாரவேல் அவர்கள் 30.09.2016அன்று பணி ஒய்வு பெற்றார். 15.09.1958இல் பிறந்த இவர், மொத்தம் 33 ஆண்டும் 07 மாதங்களும் பணியாற்றியுள்ளார்.

## பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களுக்கு வேண்டுகோள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 21.09.2016அன்று பல்கலைக்கழக முன்னாள் மாணவர் விடுதி கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் விடுதி, பல்கலைக்கழகத்தின் நந்தனம் வளாகத்தில் ரூபாய் 1.2 கோடி மதிப்பில் கட்டப்பட இருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் அனைவரும், பல்கலைக்கழக முன்னாள் மாணவர் விடுதி கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். நிதியுதவியை "The Finance Officer, TANUVAS - Alumni House" என்ற பெயரில் வரையோலையாகவோ (DD) / காசோலையாகவோ (Cheque) எடுத்து, பொதுச் செயலாளர், பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பேராசிரியர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை (இறைச்சி அறிவியல்), சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை – 600 007 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இணையம்வழி நிதியுதவி அளிக்க விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கைப் பயன்படுத்திக் கொள்ளவும்:

| | |
|---|---|
| Name of the account holder | : The Finance Officer, TANUVAS – Alumni House |
| Bank Name | : Union Bank of India |
| Branch | : Madhavaram |
| Savings Bank Account No. | : 332902010723053 |
| IFSC code of the Bank | : UBIN0533297 |
| Bank code No. | : 533297 |
| MICR No. of the branch | : 600026015 |
| Swift code no. | : UBININBBOMD |
| TANUVAS PAN No. | : AABCF5616K |

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் பி. செல்வராஜ்
முனைவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்